செய்தி வெளியீடு எண். 09-2017 நாள்: 05.06.2017

# குவைத் எண்ணெய் நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் முன்னணி மருத்துவமனைகளுக்கு நிர்வாகப் பிரிவில் பணிபுரிய அனுபவமுள்ள நபர்களை தேர்ந்தெடுப்பதற்காக 14.06.2017 முதல் 24.06.2017 வரை நேர்காணல் நடைபெறும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

குவைத் எண்ணெய் நிறுவனத்தின் (Kuwait Oil Company – KOC) கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் முன்னணி மருத்துவமனைகளுக்கு நிர்வாகப் பிரிவு டிப்ளமோ தேர்ச்சியுடன் மருத்துவப்பிரிவில் 5 வருட பணி அனுபவமுள்ள ஆண்/ பெண் மேற்பார்வையாளர்கள் (Supervisor), இளநிலைப்பட்டத்துடன் டிப்ளமோ கம்யூட்டர் தேர்ச்சியுடன் 5 வருட பணி அனுபவமுள்ள பெண் டெக்னிகல் உதவியாளர்கள் (Technical Assistant), ஒரு வருட பணி அனுபவத்துடன் GNM/ANM தேர்ச்சி பெற்ற சேப்பர்ஒன் (Chaperone) பெண் செவிலியர்கள், ஒரு வருட பணி அனுபவமுள்ள பெண் மொழிபெயர்ப்பு கிளினிகல் உதவியாளர் (Clinical Assistant Interpreter), இரண்டு வருட பணி அனுபவமுள்ள ஆண்/ பெண் GNM நர்சிங் உதவியாளர் (Nursing Aide), டிப்ளமோ அறுவைச்சிகிச்சை டெக்னிசியன் தேர்ச்சியுடன் இரண்டு வருட பணி அனுபவமுள்ள ஆண்/ பெண் அறுவைச்சிகிச்சைப்பிரிவு உதவியாளர்கள் (Operating Theatre Assistant), மூன்று வருட பணி அனுபவமுள்ள பெண் உதவி மகப்பேறு மருத்துவ டெக்னிசியன்கள் (Assistant Medical Technician (Obs & Gyne)) மற்றும் இரண்டு வருட பணி அனுபவமுள்ள வார்டு பிரிவு பெண் பணியாளர்கள் (Ward Clerk) போன்றவர்களுக்கான நேர்முகத் தேர்வு 14.06.2017 முதல் 24.06.2017 வரை சென்னையில் நடைபெற உள்ளது.

Registered Office: Integrated Employment Office Complex, No.42, Alandur Road, Guindy, Chennai – 600 032. Phone No: 0991-44-22505886 / 22502267 / 22500417

தேர்ந்தெடுக்கப்படும் மேற்பார்வையாளர்களுக்கு ரூ.1,60,000/- டெக்னிகல் உதவியாளருக்கு ரூ.95,000/- சேப்பர்ஒன் ரூ.48,000/- கிளினிகல் உதவி இன்டர்பிரிடர் ரூ.74,000/- செவிலியர் எய்டுக்கு ரூ.50,880/-, அறுவைச் சிகிச்சை உதவியாளருக்கு

ரூ.48,000/-, உதவி மகப்பேறு மருந்து டெக்னிசியன்களுக்கு ரூ.64,000/- மற்றும் வார்டு பிரிவு பணியாளருக்கு ரூ.74,000/- மாத ஊதியம் மற்றும் ஒரு வருட ஒப்பந்தத்துடன் இலவச விமான டிக்கெட், இலவச இருப்பிடம் மற்றும் உணவுப்படி ஆகிய சலுகைகள் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணியிடங்களுக்கு உரிய தகுதி மற்றும் அனுபவமுள்ளவர்கள் www.omcmanpower.com என்ற வலைதளத்தில் உள்ள simple resume (KOC) என்ற தலைப்பினை கிளிக்செய்து சுயவிவர மாதிரி படிவத்தினை பதிவிறக்கம் செய்து உரிய இணைப்புகளுடன் omckoc2017@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு 08.06.2017க்குள் அனுப்பும்படி தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு 044-2255886/22502267/22500417/8220634389 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.